

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வியாழக்கிழமை 27.08.2026

# பரந்தூர் ரத்துக்குப் பின் இருக்கும் சதிகள்!

சென்னைக்கு அருகில் பரந்தூர் பகுதியில் அமைய இருந்த இரண்டாவது விமான நிலையத் திட்டத்தை கைவிடுவதாக முதலமைச்சர் விஜய் அறிவித்திருக்கிறார். இது தமிழ்நாட்டின் வளர்ச்சியை, எதிர்காலத்தை பின் நோக்கித் தள்ளும். அனைத்து விதத்திலும் பின்னடைவையே தரும். இப்படி ஒரு தவறான முடிவை அவர்தான் எடுத்தாரா? எடுக்க வைக்கப்பட்டாரா? தமிழ்நாட்டின் வளர்ச்சியைத் தடுக்க நினைக்கும் எண்ணம் கொண்டவர்களின் சதிச்செயலுக்கு அவர் பழியாகிவிட்டார் என்றே சொல்ல வேண்டும். முதலமைச்சர் விஜய் எடுத்த மிகமிக தவறான, மோசமான முடிவின் காரணமாக தமிழ்நாடு அடையப்போகும் பின்னடைவை நினைத்தால் வருத்தமாகவும் வேதனையாகவும் இருக்கிறது.

பரந்தூரில் விமான நிலையம் அமைக்கும் திட்டத்தை ரத்து செய்து சட்ட மன்றத்தில் அவர் ஆற்றிய உரை வலிமையானதாக இல்லை. சென்னை மீனம்பாக்கம் விமான நிலையம் விரிவுபடுத்தப்படுமாம். விரிவுபடுத்துவதற்கு மீனம்பாக்கம் பக்கம் இடமிருக்கிறதா என்று யாரையாவது கேட்டாரா முதலமைச்சர் விஜய்?

**விவசாய நிலங்கள் அதிகம் பாதிக்காத வகையில் இடம் பரிசீலனை செய்யப்பட்டு அங்கு புதிய விமான நிலையம் அமைக்கப்படுமாம். இதைச் சொல்லி இருப்பதும் விஜய் தான். அது என்ன அதிகம் பாதிக்காத வகையில்? அப்படி எந்த இடத்தை அடையாளம் கண்டு வைத்துள்ளார் விஜய்? எதை எடுத்தாலும் தி.மு.க. அரசு மீது பழியைப் போட்டு விட்டால் போதும். அதிலேயே திருப்தி அடைந்து விடுகிறார் விஜய். 'முந்தைய அரசு விவசாயிகள் பாதிக்கும் வகையில்' இத்திட்டத்தைக் கொண்டு வந்ததாம். இவரிடம் என்ன திட்டம் இருக்கிறது? 'அதிகம் பாதிக்காத வகையில்' என்று தான் இவரும் சொல்கிறார். அதிகம் பாதிக்காத, குறைவாக பாதிக்காத என்பதெல்லாம் ஒரு அளவுகோலா?**

இது என்ன சாதாரண ஒரு கட்டட ஒப்பந்தமா? வேண்டாம் என்று சொல்லி விட்டால் நிறுத்திவிட? பல்லாண்டு காலத்துக்கு தமிழ்நாட்டின் அனைத்து வளர்ச்சிக்கும் அடித்தளமாக அமையப் போகும் விமான நிலையத்தை உருவாக்கும் திட்டம் இது. முதலீடுகளை ஈர்ப்பதாக இருந்தாலும், வெளிநாட்டு நிறுவனங்கள் வருவதாக இருந்தாலும் அதற்கு அளவுகோல் விமான நிலையம் போன்ற உள்கட்டமைப்பு வசதிகள்தான். பரந்தூர் ரத்து ஆனதால் லட்சக்கணக்கான வேலைவாய்ப்புகள் கிடைக்காமல் போகும். ஏற்றுமதி, இறக்குமதி நின்று போகும். விமான நிலையத்தை மையமாக வைத்து உருவாகும் சாலைப் போக்குவரத்து, ரயில் போக்குவரத்து ஆகியவை ரத்து ஆகும். இது எதைப் பற்றியும் விஜய் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை.

கடந்த ஏப்ரல் மாதம் சென்னை வந்த ஆந்திர மாநில முதலமைச்சர் சந்திரபாபு என்ன சொன்னார் என்று நினைவு இருக்கிறதா?

**"சென்னையில் உள்ள விமான நிலையம் மிகப் பழமையானது. ஆனால் அது ஐதராபாத், பெங்களூரு விமான நிலையத்துடன் ஒப்பிடும் அளவுக்கு இருக்கிறதா? ஐதராபாத்தை நான் மேம்படுத்திய பிறகு என்னை கர்நாடகம் பின்பற்றியது. தற்போது அடுத்த ஒரு நவீன விமானநிலையத்தை அமராவதியில் 5 ஆயிரம் ஏக்கரில் கட்டுகிறேன். இப்போது சொல்லுங்கள், தமிழ்நாடு எங்கே இருக்கிறது?"** என்று கேட்டார் ஆந்திர மாநில முதலமைச்சர் சந்திரபாபு. இத்தகைய நிலைமையில் மீனம்பாக்கம் விமான நிலையத்தை வைத்துக் கொண்டு, பரந்தூர் விமானநிலையத்தையும் ரத்து செய்து விட்டார் விஜய்.

**3 ஆவது இடத்தில் இருந்த சென்னை விமானநிலையம், 5 ஆவது இடத்துக்கு போய்விட்டது. 5 ஆவது இடத்தில் இருந்த பெங்களூரு விமான நிலையம் 3 ஆவது இடத்துக்கு வந்துவிட்டது. இதுதான் இன்றைய நிலைமை ஆகும். இதையெல்லாம் முதலமைச்சர் விஜய் அறிவாரா எனத் தெரியவில்லை.**

**விமான நிலையம் அமைப்பது என்பது ஏதோ பேருந்து நிழற்குடை அமைப்பது அல்ல. சென்னைக்கு இரண்டாவது விமானநிலையம் வேண்டும் என்று 2007 ஆம் ஆண்டு அனைத்துக் கட்சிக் கூட்டம் போட்டு முடிவெடுக்கப்பட்டது. அதனைத் தான் சிதைத்திருக்கிறார் விஜய். எதையும் உருவாக்கத் தெரியாதவர்கள், இதுபோன்ற அழிவு வேலைகளை நன்றாகச் செய்வார்கள்.**

5,746 ஏக்கரில் 27,400 கோடி மதிப்பீட்டில் அமையப் போகும் திட்டம் இது. பரந்தூர் விமான நிலையம் வேண்டாம் என்றால் மாற்று இடத்தை தேர்வு செய்து விட்டுச் சொல்ல வேண்டாமா?

பெங்களூரும், ஐதராபாத்தும் சென்னையை முந்திச் சென்று விட்டன. இந்தச் சூழலில் பரந்தூரையும் ரத்து செய்வது சென்னையையும், தமிழ்நாட்டையும் முடக்கும் திட்டம் ஆகும். அயல் மாநிலத்தவர்களை தன்னைச் சுற்றி வைத்துக் கொண்ட விஜய் அவர்களின் சதிச் செயல்களுக்கு சம்மதம் தெரிவித்தது ஏன்?

கடந்த ஐந்தாண்டு கால திராவிட மாடல் ஆட்சியில் தமிழ்நாடு அனைத்து துறைகளிலும் முன்னேறியது. இந்தியாவில் இரண்டாவது பொருளாதார மாநிலமாக ஆனது. பன்னாட்டு நிறுவனங்கள் நம்மை நோக்கி வந்தார்கள். வேலைவாய்ப்புகள் அதிகம் ஆனது. இதன் மூலமாக ஒன்றிய அரசின் அனைத்து வளர்ச்சிக் குறியீட்டிலும் முன்னுக்கு வந்தது தமிழ்நாடு. 'எல்லார்க்கும் எல்லாம்' என்பதே திராவிட மாடலின் நோக்கம் என்று சொல்லி வளர்த்தார் அன்றைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். இது இந்தியாவின் பல்வேறு மாநிலத்தவர்கள் கண்ணை உறுத்தியது. தமிழ்நாட்டின் வளர்ச்சியை பொறுக்க முடியாமல் வெம்பினார்கள்.

நடைபெற்று முடிந்த தேர்தலில் பெரும்பான்மை கிடைக்காத நிலையிலும், சில கட்சிகளுக்கு அமைச்சர் பதவி கொடுத்தும், குதிரை பேரம் நடத்தியும் ஆட்சி அமைத்துள்ளார் விஜய். தமிழ்நாட்டின் வளர்ச்சியை பொறுத்துக் கொள்ள முடியாதவர்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்துள்ளது. தொலை நோக்குப் பார்வையும், முன்பின் சிந்தனையுமற்ற முதலமைச்சர் விஜய் எடுக்கும் தன்னிச்சையான, முதிர்ச்சியற்ற முடிவுகளும் தமிழ்நாட்டின் எதிரிகளுக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. அத்தகைய முடிவுகளில் ஒன்று தான் பரந்தூர் விமான நிலையத் திட்டம் ரத்து ஆகும்.

**'ஆந்திராவுக்கு உதவும் விஜய்' என்று சமூக வலை தளங்களில் மிகச் சரியாக விமர்சித்து வருகிறார்கள். 'பரந்தூர் விமான நிலையத் திட்டம் கைவிடப்பட்டது தமிழ்நாட்டின் வளர்ச்சி மீது நடத்தப்பட்ட சர்ஜிக்கல் ஸ்டிரைக்' என்றும் குற்றம் சாட்டி வருகிறார்கள்.**

**தான் எடுத்தது தவறான முடிவு என்று ஒரு காலத்தில் வருத்தப்படுவார் விஜய். அப்போது வருத்தப்பட்டு என்ன பயன்?**

## தே.மு.தி.க. நிறுவனர்

# கேப்டன் விஜயகாந்த் புகழ் நீடு வாழ்க!

## 74–வது பிறந்தநாளையொட்டி – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

**சென்னை, ஆக. 27-**

**தே.மு.தி.க. நிறுவனர் கேப்டன் விஜயகாந்த் அவர்களின் புகழ் நீடு வாழ்க என்று அவரது பிறந்த நாளையொட்டி கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளார்.**

தே.மு.தி.க. நிறுவனர் கேப்டன் விஜயகாந்த் அவர்கள் சிறிது காலம் உடல் நலம் குன்றி இருந்தபோது, அப்போது முதல்வராக இருந்த கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள், கேப்டன் அவர்களின் இல்லம் சென்று அவரது உடல் நலம் குறித்து கேட்டறிந்தார் (அப்போது எடுக்கப்பட்ட புகைப்படம்தான் இங்கே வெளியிடப்பட்டுள்ளது).



மேலும் கேப்டன் விஜயகாந்த் அவர்கள் 28.12.2023 அன்று மறைந்த பொழுது, சென்னை ராஜாஜி ஹாலில் பொதுமக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, தே.மு.தி.க. தலைமை அலுவலகத்தில் அவரது உடல் 'திராவிட மாடல்' ஆட்சியில் அரசு மரியாதையுடன் அடக்கம் செய்யப்பட்டது என்பது நினைவு கூரத்தக்கது.

இந்நிலையில் கேப்டன் விஜயகாந்த் அவர்களின் 74-வது பிறந்தநாளையொட்டி, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளத்தில் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தி வருமாறு:-

**ஏழை மக்களின் மேல் கொண்ட அளவற்ற அன்பால் அவர்களின் நெஞ்சத்தில் நீங்காத நினைவாய் வாழும் எனது அருமை நண்பரும் தே.மு.தி.க. நிறுவனருமான கேப்டன் விஜயகாந்த் அவர்களின் பிறந்தநாள் இன்று!**

**அவரின் கனவுகளை நனவாக்க உழைக்கும் தே.மு.தி.க. தோழர்களுக்கும் அவர்களை வழிநடத்தும் அன்புச் சகோதரி திருமதி @PremalathaDMDK அவர்களுக்கும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.**

**கேப்டன் அவர்களின் புகழ் நீடுவாழ்க!**

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

## சமத்துவத்தையும் – சகோதரத்துவத்தையும் முன்னிறுத்தும் நல்லிணக்கப் பெருவிழாவைக் கொண்டாடும்

# மலையாள உடன்பிறப்புகள் அனைவருக்கும் நல்வாழ்த்துகள்!

## ஓணம் திருநாளையொட்டி – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!

**சென்னை, ஆக. 27-**

**"சமத்துவத்தையும் - சகோதரத்துவத்தையும் முன்னிறுத்தும் அழகிய நல்லிணக்கப் பெருவிழாவாகக் கொண்டாடி மகிழும் மலையாள உடன் பிறப்புகள் அனைவருக்கும் ஓணம் நல்வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்" என்று கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள ஓணம் திருநாள் வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.**

கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் ஓணத்திருநாள் வாழ்த்துச் செய்தி வருமாறு:-



**கேரள மக்களின் அறுவடைத் திருநாளாகவும் பண்பாட்டுப் பெருவிழாவாகவும் ஓணம் கொண்டா டப்படுகிறது. கேரளம் மட்டுமில்லாமல், பூமிப்பந்தில் மலையாளிகள் வாழும் பகுதிகளில் எல்லாம் எழுச்சியுடனும், மகிழ்ச்சியுடனும் கொண்டாடப்படும் திராவிட மொழிக் குடும்பத்தின் முக்கிய விழாவாக ஓணம் திகழ்கிறது.**

**சூழ்ச்சிகளாலும் புனையப்பட்ட கதைகளாலும் மாவேலி மன்னனை மறக்கடிக்க நினைத்ததை முறியடித்து, ஆண்டுதோறும் அத்திராவிட அரசனை மக்கள் நினைவு கூரும் விழாவாக ஓணம் திகழ்கிறது. அறுசுவை உணவும் அழகிய புத்தாடைகளும் அத்தப் பூக்கோலமும் கலை நிகழ்ச்சிகளும் நிறைந்த வண்ணமயமான திருவிழா வாக உலகெங்கும் கொண்டாடப்படுகிறது.**

**தமிழ்நாட்டில் வாழும் மலையாளச் சகோதரர்களும் இவ்விழாவை இனிதே கொண்டாட வேண்டுமென்ற பரந்த நோக்கத்தோடு, கேரள எல்லையோர மாவட்டங்களில் ஓணம் பண்டிகைக்காக விடுமுறை அளித்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.**

**கடந்த திராவிட மாடல் அரசிலும் இருமாநில உறவை வலுப்படுத்தும் வகையில் அம்மாநில அரசுடன் இணைந்து பல்வேறு முயற்சிகளை நானும் மேற்கொண்டேன். தோள்சீலைப் போராட்ட வெற்றியின் 200ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு தோழர் பினராயி விஜயன் அவர்கள் தமிழ்நாடு வந்தார். வைக்கம் போராட்ட நூற்றாண்டு விழாவுக்காக நான் கேரளம் சென்றேன்,**

**அந்த வகையில், சமத்துவத்தையும், சகோதரத்துவத்தையும் முன்னிறுத் தும் அழகிய நல்லிணக்கப் பெருவிழாவாக ஓணத்தைக் கொண்டாடி மகிழும் என தருமை மலையாள உடன்பிறப்புகள் அனைவருக்கும் ஓணம் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.**

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

## த.வெ.க. அரசு பால் உற்பத்தியாளர்களுக்கு – லிட்டருக்கு

# ரூபாய் 45 கொடுத்தால்தான் ஆவினுக்கு பால் வரும்!

## சட்டப் பேரவையில் கவன ஈர்ப்பில் முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு பேச்சு!

**சென்னை, ஆக. 27-**

**சட்டப்பேரவையில் ஆவின் பால் குறித்த கவன ஈர்ப்பில் முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு பேசுகையில், பால் உற்பத்தியாளர்களுக்கு ஒரு லிட்டருக்கு 45 ரூபாய் கொடுத்தால் தான் தனியாருக்கு பால் போகாமல் தடுக்க முடியும் என்று குறிப்பிட்டார்.**

சட்டப்பேரவையில் ஆவின் பால் குறித்த கவன ஈர்ப்பில் முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு பேசியதாவது:-



பேரவைத் தலைவர் அவர்களே, பால் உற்பத்தியாளர்கள் எல்லாம் தனியாருக்கு போய் பால் ஊற்றுகின்ற சூழ்நிலை ஏற்பட்டு இருக்கின்றது. ஆவினுக்கு பால் ஊற்றினால் தான் பயனாளிகள் தமிழ்நாட்டில் யாரெல்லாம் பாலை பயன்படுத்துகிறார்களோ அவர்களுக்கு சவுகரியமாக இருக்கும். குறைந்த விலையில் அவர்கள் பயன்படுத்த முடியும்.

### ஆவினுக்கு பால் கொடுப்பது கேள்விக்குறி!

இன்றைக்கு தனியாரில் பார்த்தோமேயானால் கேரளா அரசு, மில்மா என்பவர்கள் 45.27 ரூபாய்க்கு ஒரு லிட்டர் பால் வாங்குகிறார்கள். அக் ஷனா, ஆரோக்கியா என்பவர்கள் ஏறத்தாழ 42 ரூபாய்க்கு வாங்குகிறார்கள். இப்படி தனியார் பால் உற்பத்தியாளர்கள் வாங்குகின்ற காரணத்தினால் ஆவினுக்கு பால் கொடுப்பது என்பது ஒரு கேள்விக்குறி யாக ஆகிக் கொண்டிருக்கிறது.

ஒரு வார காலத்திற்கு முன்னாள் முதலமைச்சர் அவர்கள் இங்கே பால் விலை ஏற்றும் குறித்து இங்கே குறிப்பிட்டார். அதில் சொசைட்டி மூலமாக ஒரு ரூபாய் அவர்கள் கொடுக்க வேண்டும். அரசாங்கம் 2 ரூபாய் ஆதார விலை தருகிறது. பல சொசைட்டிகளைப் பார்க்கின்ற போது, சொசைட்டிகளை நடத்த முடியாத சூழ்நிலை இருக்கின்றபோது அவர் களால் ஒரு ரூபாய் கொடுக்கின்ற நிலையே இல்லை என்கிற நிலையே ஒரு பக்கம்.

இன்னொன்று இன்றைக்கு பால் உற்பத்தியாளர்கள் பற்றி சொல்ல வேண்டுமேயானால் தீவன விலை, மாடுகளுக்கு வேண்டிய உணவு இவைகளை எல்லாம் பார்க்கின்ற போது விலை அதிகமாக இருக்கின்ற காரணத்தினால் கட்டுப்படியாக வில்லை. அவர்களுடைய எதிர்பார்ப்பு என்பது 45 ரூபாய் கொடுத்தால் பரவாயில்லை. எப்படியாவது, அதுதான் கட்டுப்படியாகும் என்ற நிலை இருக்கிறது.

அதனால் தமிழ்நாடு முழுவதும் எனக்குத் தெரிந்து, கிட்டத்தட்ட பார்த்தீர்கள் என்றால் உங்களுக்கு தெரியும் ஒரு பத்துக்கும் மேற்பட்டு இருக்கிற பால் உற்பத்தியாளர் சங் கங்களே அங்கங்கே போராட்டங்கள் என்ற அடிப்படையில் செய்வது மட்டுமல்ல, 24-ஆம் தேதியில் இருந்து நாங்கள் ஆவினுக்கு பாலை ஊற்ற மாட்டோம் என்ற நிலையால் ஆங்காங்கு போராட்டம் நடைபெறுகிறது.

### தாய்மார்கள் போராட்டம்!

தொலைக்காட்சியிலே பார்க்கின்ற போது தாய்மார்கள் எல்லாம் பாலை கொண்டு வந்து கொட்டிவிட்டு தங்கள் அதிருப்தியை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

எனவே அரசு பொறுத்தவரை குறைந்தபட்சம் ரூபாய் 45 ரூபாயிலிருந்து 46 ரூபாய் வரை ஒரு லிட்டருக்கு எதிர்பார்க்கிறார்கள். எனவே இந்த அரசு உடனே ஆவினுக்கு பால் வருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். ஏனென்றால் கடந்த ஜனவரி 25ஆம் தேதியும், இப்போதுள்ள நிலையையும் ஒட்பிட்டுப் பார்த்தால் ஆவினுக்கு பால் ஊற்று வதே குறைந்து விட்டது. அதற்கு காரணம் அவர்களுக்கு கட்டுப்படி யான விலை தரவில்லை என்கிற குற்றச்சாட்டு இருக்கிறது. எனவே கூடுதலாக இந்த அரசாங்கம் பால் உற்பத்தியாளர்களுக்கு 45 ரூபாய் கொடுத்தால்தான் ஆவினுக்கு பால் வரும். தனியாருக்கு பால் போகாமல் நிறுத்த முடியும். எனவே, நான் அரசின் கவனத்திற்கு இதை கொண்டு வருகிறேன்.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு பேசினார்.